**தமிழச்சி தங்கபாண்டியன்**

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

**கேள்வி :**

அ) ஆன்லைன் சூதாட்டத்திற்கான பிரிவுகள் 194 B மற்றும் 194 BB ஆகியவற்றின் கீழ் ஆன்லைன் பந்தயத்திற்கும் பொருந்தும் வகையில், வரி விலக்கு தொடர்பான, TDS முறையில், ரூபாய் 10,000 பந்தயத்துக்கான குறைந்தபட்ச வரம்பை, அகற்றுவதற்கான விரிவான காரணங்கள் என்ன?

ஆ) ஆன்லைன் பந்தயங்கள், இணையதளங்களில் எளிதாக வணிகம் செய்வதற்கு ஏற்றாற்போல், குறைந்தபட்ச வரம்பை நீக்குவதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி அரசு அறிந்திருக்கிறதா?

இ) அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

ஈ) ஆத்மநிர்பர் பாரத் திட்டத்தின் கீழ், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மதிப்பு சேர்க்கும் வகையில், ஆன்லைன் பந்தயங்களை மேம்படுத்த, அரசு எடுத்துள்ள அல்லது முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி அளித்த பதில்:**

பகுதி (அ) க்கான பதில்:

லாட்டரி அல்லது குறுக்கெழுத்துப் புதிர் போட்டிகள் போன்றவற்றின், வெற்றிகள் தொடர்பான ரூபாய் 10 ஆயிரத்துக்கு என, நிதிச் சட்டம் 2023ஆம் நிதியாண்டு

வருமான வரி சட்ட பிரிவு 194 B மற்றும் குதிரை பந்தயத்தின் வெற்றிகள் தொடர்பான சட்டப்பிரிவு 194 BB ஆகியவற்றை திருத்தியுள்ளது.

மேலும், நிதிச் சட்டம் 2023ன் படி, ஆன்லைன் பந்தயங்கள், சட்டப் பிரிவு 194 B-யின் வரம்பிலிருந்து அகற்றப்பட்டு, ஆன்லைன் பந்தயத்தில் இருந்து பெறப்படும், நிகர வெற்றிகளில், 30 சதவீதம், வரி விலக்கு (TDS) வழங்குவதற்கான சட்டத்தில் 1-ம் தேதி, ஏப்ரல், 2023 முதல், சட்டப் பிரிவு 194 A சேர்க்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச வரம்பானது ரூபாய் 10 ஆயிரம் மதிப்புள்ள, ஆன்லைன் பந்தயங்கள், அதன் வெற்றிகள், பயனர் கணக்கில் உள்ள "நிகர வெற்றிகள்" என்பதன் மூலம் அகற்றப்பட்டது. இது ஆண்டின் அனைத்து வெற்றிகளையும் (இழப்புகள் எண்ணிக்கை உட்பட) திரட்டிய பிறகு, கணக்கெடுக்கப்படுகிறது.

பகுதி (ஆ) (இ) மற்றும் (ஈ) க்கான பதில்கள்

மத்திய அரசு வருமான வரி விதிகள்: 1962- ல் G.S.R. 22, மே, 2023 தேதியிட்ட 379 (E) எண். 28/2023. இது, நிகர வெற்றிகளை கணக்கிடுவதற்கான சூத்திரத்தை விளக்குகிறது. மேலும், மத்திய நேரடி வரிகள் வாரியமானது, 2023ம் ஆண்டு, மே, 22 ஆம் தேதியிட்ட, சுற்றறிக்கை எண். 5ஐ வெளியிட்டுள்ளது. இதில், நிகர வெற்றிகள் மீதான மூலவரிக்கு தொடர்பான, பல்வேறு சிக்கல்களை தெளிவுபடுத்துகிறது.

மேற்கூறிய விதி மற்றும் சுற்றறிக்கையானது, ஆன்லைன் பந்தயத் துறைக்கான, வரி விதிப்பில் உறுதியாக இருப்பதை உறுதி செய்கிறது. இது, எளிதாக வணிகம் செய்வதை ஊக்குவிப்பதோடு, தொழில் வளர்ச்சிக்கும் உதவுகிறது.